Women Empowerment for Sustaining Development

# Role of women in eye care

# கண் நலனில் பெண்களின் பங்கு




ARAVIND
EYE CARE SYSTEM

## Madurai Symposium 2019

Thamukkam Grounds, Madurai
September 21, 2019

ARAVIND
EYE CARE SYSTEM

## அறிமுகம்



உலகில் 3 கோடியே 90 லட்சம் பேர் பார்வையில்லாமல் இருக்கின்றனர். அவர்களில் 1 கோடியே 20 லட்சம் பேர் இந்தியாவில் வசிக்கிறார்கள். இவற்றில் 80% பார்வையிழப்பை தவிர்க்க முடியும். 10 நிமிட கண்புரை அறுவை சிகிச்சை மூலம் 75 லட்சம் பேருக்கு இழந்த பார்வையை திரும்ப வழங்க முடியும். கண்ணாடி அணிவதன் மூலம் 24 லட்சம் பேரால் இயல்பாக பார்க்க ஐயும். இவர்களைத் தவிர இந்தியாவில் 20 கோடி பேருக்கு கண் மருத்துவம் தேவைப்படுகிறது.

கண் மருத்துவத்துறையில் இருக்கும் இந்த தேவையினை உணர்ந்து, அரவிந்த் கண் மருத்துவமனை ''தேவையற்ற பார்வையிழப்பை அறவே தவிர்த்தல்'' என்கிற உயரிய நோக்கோடு 'உயர் தர சேவையை குறைந்த கட்டணத்தில் அதிக எண்ணிக்கையிலான நோயாளிகளுக்கு' வழங்கி வருகிறது. அரவிந்தில் பயன்பெறும் நோயாளிகளில் ஏறக்குறைய 50% பேர் முழுவதும் இலவசமாக அல்லது மிக மிகக் குறைந்த கட்டணத்தில் சிகிச்சை பெறுகிற போதிலும் அரவிந்த் பொருளாதாரத்தில் தன்னிறைவோடு செயல்படுகிறது.அரவிந்த் சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வின்றி எல்லா நோயாளிகளுக்கும் ஒரே மாதிரியான உயர்தர சிகிச்சையினை வழங்குவதினை முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

அரவிந்தின் குறிக்கோளான ''தேவையற்ற பார்வையிழப்பை அறவே நீக்குதல்'' என்கிற இலக்கினை அடையும் வண்ணம் அரவிந்தின் கண் காப்பு அமைப்பில் தற்போது நேரடி சிகிச்சை வழங்கும் 7 பெரிய முதல் தர மருத்துவமனைகளும், 6 சிறிய இரண்டாம் நிலை மருத்துவமனைகளும், 6 வெளிநோயாளிகள் பிரிவு மட்டும் கொண்ட சமுதாய கண் மையங்களும், தகவல் தொழில்நுட்ப உதவியுடன் கூடிய 75 ஆரம்ப கண் பரிசோதனை மையங்களும் செயல்படுகின்றன. இவை தவிர்த்து உலகளாவிய அளவில் பார்வையிழப்பை தவிர்க்க பிறரையும் இணைக்கும் விதமாக முதுநிலை கண் மருத்துவக்கல்லூரி, சமுதாய கண்ணியல் பயிற்சி நிறுவனம், மருத்துவ ஆய்வு நிறுவனம், கண் மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகள் தயாரிப்பு நிறுவனம், கண்ணியல் வங்கிகள் ஆகியவைகளும் செயல்படுகின்றன. தேவையற்ற பார்வையிழப்பை தவிர்ப்பதில் முக்கிய நிறுவனமாக உலக சுகாதார நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்று அதனோடு அரவிந்த் கைகோர்த்து செயல்படுகிறது.

## பேசுபொருள்

### MLOP (Mid Level ·Ophthalmic Personnel)

இடைநிலை கண்மருத்துவ செவிலியர்கள் தேவைக்கும் வழங்கலுக்கும் உள்ள இடைவெளி எல்லா தளங்களிலும் பெரிதாகவே இருக்கிறது. மருத்துவம் மற்றும் சேவைத்துறையிலும் இந்த இடைவெளியானது மிகப்பெரியது. குறிப்பாக செவிலியர்களுக்கான தேவை அதிகமாக இருக்கும் போதிலும்

செவிலியர் கல்வி கற்று வரும் நபர்களின் எண்ணிக்கை தேவைக்கு மிகவும் குறைவாகவே உள்ளது. ஒருபுறம் குடும்ப வறுமை, வாய்ப்பின்மை காரணமாக கிராமப்புறங்களில் பன்னிரெண்டாம் வகுப்பு நிறைவு செய்த பெண்கள் பலர் இளம்வயதில் திருமணம், கூலி வேலை அல்லது வீட்டோடு இருந்து விடுகின்றனர். மறுபுறம் மருத்துவம் மற்றும் சேவைத்துறையில் செவிலியர்களின் தேவை அதிகமாக இருக்கிறது. அரவிந்த் இந்த இரண்டையும் ஒரு நேர்கோட்டில் இணைக்க முயன்று அதில் வெற்றியும் அடைந்து உலகிற்கு ஒரு முன் மாதிரியை கட்டமைத்திருக்கிறது. MLOP என்கிற முறையை கண் மருத்துவத்துறைக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறது. பன்னிரெண்டாம் வகுப்பினை நிறைவு செய்த, மேல்படிப்பிற்கு செல்லும் வசதியும் வாய்ப்புமற்ற கிராமப்புற மற்றும் நகர்ப்புற பெண்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு முறையான பயிற்சியினை வழங்கி வேலைவாய்ப்பினையும் உறுதி செய்கிறது.



அரவிந்தின் பணியாளர்களில் பெரும்பான்மையைக் (60%) கொண்டிருக்கும் இந்த செவிலியர்களின் பங்கு அரவிந்தின் அபரிமித வளர்ச்சிக்கும், தரமான சேவைக்கும், அதிக நோயாளிகளை கண்டடைந்து குணப்படுத்துவதற்கும் முக்கிய காரணியாக திகழ்கிறது. மறுபுறம் இந்த பெண்களின் வாழ்க்கைமுறையும், சூழலும், பொருளாதாரமும், சமூக அந்தஸ்தும் குறிப்பிடத்தகுந்த நல்ல மாற்றத்தை அடைகிறது. பெண்களின் சுய முன்னேற்றம் அவர்களின் குடும்ப மற்றும் சமூக முன்னேற்றமாக மடைமாற்றமடைகிறது.

**அனைவருக்கும் கண் நலம்**

கண் நலம் தேவைப்படுவோரில் பெரும்பகுதியினர் பெண்கள். ஆனால் கண் நலம் பெறுவதில் அவர்களின் பங்கு குறைவாகவே உள்ளது. வருமானம் இன்மை, மருத்துவமனைக்கு உடன் வர துணையின்மை, போதிய கல்வியறிவு இன்மை, அறியாமை, குடும்பத்தினரை சார்ந்த வாழ்க்கைமுறை என இதற்கு பல காரணங்கள் இருக்கலாம். அரவிந்த் கண் நலம் தேவைப்படும் அனைவரையும் குறிப்பாக பெண்களை சென்றடையும் இலக்குடன் செயல்படுகிறது.

## நோக்கம்

அரசு, சமூகம், சமூக நலன் சார்ந்த செயற்பாட்டாளர்கள் மற்றும் நிறுவனங்களின் துணையின்றி இது சாத்தியமில்லை. இந்த ஒருநாள் நிகழ்வு மேற்சொன்னதில் கணிசமான பங்களிப்பைக் கொண்டிருக்கும் உங்களுக்கு கண் நலம் குறித்த கூடுதல் புரிதல்களை கொடு சேர்த்து அனைவருக்கும் கண் நலம் என்கிற உயரிய இலக்கினை அடைவதிலும், வாய்ப்பும் வசதியுமற்ற பெண்களுக்கான சுய முன்னேற்ற மாதிரியான MLOP முறையினை அறிமுகம் செய்து அதில் மேலும் பலரை இணைக்கும் நோக்கிலும், பங்கேற்பாளர்களான உங்களின் பங்களிப்பை உறுதி செய்யும் நோக்கிலும் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.






## நிகழ்வுகள்

- ஆரம்ப கண் பரிசோதனை மையத்தின் மாதிரி மற்றும் கண் பரிசோதனை அரங்கு
- சுய பார்வை பரிசோதனை அரங்கு
- கண் நலம் மற்றும் மருத்துவ கண்காட்சி அரங்கு
- வினாடி வினா
- கலந்துரையாடல்

## பங்கேற்பாளர்கள்

- களஞ்சியம் பணியாளர்கள் மற்றும் குழுவினர்
- சுகம் மருத்துவமனை ஊழியர்கள்
- அரவிந்த் மற்றும் அரவிந்தில் பெண்களின் முன்னேற்றம் குறித்து தெரிந்துகொள்ள விரும்பும் அனைவரும்

மேலும் தொடர்புக்கு

**திருமதி.R.தீபா & திரு.B.உதயகுமார்**
நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்
அலைபேசி 94428 77745 / 97897 25202

**அரவிந்த் கண் மருத்துவமனை**
1, அண்ணா நகர், மதுரை 625 020
தொலைபேசி: 0452 4356100
மின்னஞ்சல்: hrd@aravind.org, udayakumar@aravind.org
இணையதளம்: www.aravind.org